University of Jaffna ... RECEIVED ... Library

## கொழும்பில் மீண்டும் ஸ்தம்பிதநிலை ஏற்படுத்த

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர் 31 ஆனி 17 துல்ஹஜ்ஜா 26 இதழ் 43
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 01-07-1989

## ஜே.வி.பி. முயற்சி!!

### ரயில்வே ஊழியர்க்கு எச்சரிக்கை

(கொழும்பு)
கொழும்பில் சீரடைந்து வரும் போக்குவரத்துச் சேவையைமீண்டும் சீர்குலைத்து கொழும்பை ஸ்தம்பிமடையச் செய்ய மக்கள் விடுதலை முன்னணி [ஜே, வி. பி.] முயன்று வருவதாகத் தெரிகிறது.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ரயில்வே திணைக்கள ஊழியர்களை வேலைக்குப்

(8-ம் பக்கம் பார்க்க)

### வேலைநிறுத்தத்தில் குதிப்பதற்கு முன்னர்

## போக்குவரத்து ஊழியர்கள் பஸ்களை சேதப்படுத்தினர்

[கொழும்பு]
தென்பகுதியில் தற்போது வேலைநிறுத்தம் செய்துவரும் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் தாம் வேலைநிறுத்தத்தில் இறங்குவதற்கு முன்னர் பல பஸ்களைப் பயன்படுத்த முடியாதவாறு சேதப்படுத்தியுள்ளனர் என்று போக்குவரத்

(8ம் பக்கம் பார்க்க)

# இந்திய 'ஹெலி' தரையிறங்க

# கொழும்பில் அனுமதி மறுப்பு

## திருமலை 'ஹஜ்' பயணிகளுடன் சென்றது

(திருகோணமலை)

**திருகோணமலையிலிருந்து சென்ற இந்திய அமைதிப்படை 'ஹெலி கொப்டர்' ஒன்று கொழும்பு விமானநிலையத்தில் தரையிறங்க அனுமதிமறுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மெக்காவுக்கு 'ஹஜ்' யாத்திரைக்கு செல்லும் திருமலையைச் சேர்ந்த முஸ்லிம்களை ஏற்றிச்சென்ற அமைதிப் படையின் 'ஹெலிகொப்டரே' கொழும்பில் தரையிறங்க அனுமதி மறுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

திருமலையிலிருந்து பஸ், ரயில் போக்குவரத்துக்கள் கொழும்புக்குஇல்லாதிருந்த காரணத்தால் ஹஜ் பிரயாணிகளைக் கொழும்புககு ஹெலிகொப்டரில் ஏற்றிச் சென்றதாக வட-கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜனுப் ஜமால்தின் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட பயணிகளைக் கொழும்புக்கு அழைத்துச் செல்வதற்காகப் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்க இலங்கை அரசு எந்த முயற்சியையும் எடுக்கவில்லை எனவும்அவர் மேலும் கூறினர்

## யுத்தநிறுத்த கோரிக்கை: இந்தியா நிபந்தனை!

(புதுடில்லி)
இந்திய அமைதிப்படை இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் யுத்தநிறுத்தம் செய்ய வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளுக்கு இந்தியா சில நிபந்தனைகளை விடுத்துள்ளது.

இந்தியாவின் இந்த நிலைப்பாடு குறித்து நேற்று இந்திய வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் விடுத்த அறிக்கையில் விபரிக்கப்பட்டது.

இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா விடுத்த வேண்டுகோள் ஒன்றில், வடக்கு கிழக்கு மாகாணங்

(8ம் பக்கம் பார்க்க)

## பகிஷ்கரிப்பை கைவிட்டனர்

(யாழ்ப்பாணம்)
இரு வாரங்களுக்கு மேலாக தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வந்த யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீட மாணவர்கள் நேற்றுத் தமது பகிஷ்கரிப்பைக் கைவிட்டனர்.

பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் மாணவர்களுக்குமிடையே ஏற்பட்ட புரிந்துணர்வு அடிப்படையில் மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பை கைவிட்டனர் எனத் தெரியவருகிறது.

## 'சார்க்' தலைமைச் செயலர் அடுத்த வாரம் இலங்கை வருகிறார்!

(இஸ்லாமாபாத்)
'சார்க்' அமைப்பின் தலைமைச் செயலர் ஜனுப் அபுல் ஹசன் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஒத்திவைக்கப்பட்ட 'சார்க்' அமைச்சர்கள் மகாநாட்டை விரைவில் கூட்ட நடவடிக்கை எடுக்கும்பொருட்டு இலங்கையுடன் பேச்சு நடத்துவதற்காகவே 'சார்க்' அமைப்பின் தலைமைச் செயலாளர் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்கிறார்.

'சார்க்' அமைப்பில் அங்கம் வகிக்கும் ஆறு நாடுகளைச் சேர்ந்த வெளியுறவுச் செயலர்கள் இஸ்லாமாபாத்தில் நடத்திய கூட்டத்தில்எடுத்துக்கொண்ட தீர்மானத்திற்கு அமையவே ஜனுப் ஹசன் இந்த விஜயத்தைமேற்கொள்கிறார்.

'சார்க்' அமைச்சர்கள் மகா

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் கறுப்புக் கொடிகள்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிலையங்களிலும், வாகனங்களிலும் நேற்று கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

மிருசுவிலில் அண்மையில் நடைபெற்ற மோதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு

(8ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)
கிளிநொச்சிப்பகுதியெங்கும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

சிலதினங்களுக்கு முன்னர் மீசாலைப் பகுதியில் இடம் பெற்ற மோதல் சம்பவத்தில் பலியானவர்களுக்காகவே இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற இ. போ. ச. பஸ்கள் உட்பட பலதனியார் வாகனங்கள் பரந்தன் சந்தியிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டன.

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரி வளவில் வெடிக்காத 'ஷெல்'

(யாழ்ப்பாணம்)
யாழ். ஆஸ்பத்திரி வளவிற்குள்ளிருந்து வெடிக்காத ஷெல் ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

16ம் வார்ட்டிற்கும், 24ம் வார்ட்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் கட்டிட வேலை செய்வோர் நிலத்தை வெட்டும்

(8-ம் பக்கம் பார்க்க)

## பாடசாலைப் பகிஷ்கரிப்பு: ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

[யாழ்ப்பாணம்]
யாழ்ப்பாண மாவட்டத்தில் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் பாடசாலைப் பகிஷ்கரிப்புத் தொடர்பாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''கல்விச் செல்வம்தான் தமிழினத்தின் முழுமுதற் செல்வம் என்றுகருதும் தமிழ்பேசும் மாணவர்களின் பெற்றோர், மாணவர்களின் கல்வியைப் பாழடிக்கத் தூண்டும் சக்திகளின் நடவடிக்கைகளைக் கண்டிக்காமல் இருப்பதும், தமது எதிர்காலச் செல்வமான மாணவர்களைத் தவறான பாதையில் இட்டுச் செல்வதைப் பாராமுகமாக இருப்பதும், மாணவர்களின் கல்வியை மட்டும் அல்லாமல், அவர்களின் எதிர்காலத்தையே பாழடிக்க உதவுவதாகவே அமையும்.

''இந்தியாவிற்கும், இந்திய வம்சாவழி மக்களுக்கும் எதிரான இனவாத நடவடிக்கைகளிலும், சட்டபூர்வமாகவும், ஜனநாயக ரீதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாண சபையைக் கலைக்கவும், அதன் மூலம்

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்தியப்படை இழப்புக்களை ராஜீவ் விளக்கவேண்டும்!

### பாரதீய ஜனதாக்கட்சி கோரிக்கை

(புதுடில்லி)
இந்திய அமைதிப் படைக்கு இலங்கையில் ஏற்படும் பாரிய இழப்புக்கள் குறித்து இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நாட்டு மக்களுக்கு விளக்கிக் கூறவேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

கட்சியின் தேசிய நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

இலங்கையில் இந்தியப்படைகள் நிலைத்திருக்கும் விவகாரம் குறித்து இந்தியப் பிரதமர் நாட்டு மக்களுக்கு விளக்கிக் கூறக் கடமைப்பட்டுள்ளார் என்றும் அந்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழக மாணவன் கைது

(யாழ்ப்பாணம்)
இணுவில் பகுதியில் நேற்று இடம்பெற்ற சுற்றிவளைப்பின் போது யாழ். பல்கலைக்கழக மாணவன் எஸ். தனபால்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மானிப்பாய் ரோட்டுக்கரு காமையில் ஒரு காணிக்குப் பின்புறமாக 12 பரப்புக்காணி கிணற்றுடன் விற்பனை குண்டு. தொடர்பு கொள்ளவெண்டிய முகவரி: செ. வேலுப்பிள்ளை, கைதடி மேற்கு, கைதடி. (சி-3031)

ஆங்கில தட்டெழுத்து இயந்திரம் (Portable) சைக்கிள் (Standard) உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: 62/1, கச்சேரி, நல்லூர் ரோட், யாழ்ப்பாணம். (சி-3035)

A/L விஞ்ஞானம், வர்த்தகம், கலை பிரிவுகளுக்கான எல்லா பாடங்களுக்குமுரிய Tutes மலிவு விலையில் 2-7-89 இலிருந்து எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes, 58, A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், (சி-3034)

கைதடி நுணுவில் கண்டி வீதியில் வயிரவர் கோவிலடிக்கு அருகாமையில் வீடு கட்டி குடியிருக்க வசதியான 3 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்:- சின்னத்தம்பி ஸ்ரோர்ஸ், தி. இரத்தினம், பெரியகுளம் வீதி, கைதடி, நுணுவில், சாவகச்சேரி. (சி-3016)

### தேவை

வேப்பம் விதைகள். இலுப்பம் விதைகள் தொகையாகத் தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (ஏ-320)

I. பெண் கிளாக் (Clerk) உடன்தேவை. அண்மையில் உள்ளவர்கள் மனுச் செய்க. II. மோட்டர் றீவைண்டிங், எயர் கொண்டிசன் வேலை பழக விரும்புபவர்கள் நேரில் வரவும். Omega, Manipay Road, Jaffna. சி-3028

மொத்த வியாபார பல சரக்குக் கடை ஒன்றிற்கு அனுபவமுடைய கணக்காளர் ஒருவர் தேவை. யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. C-3024 மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-3024)

நல்ல அனுபவம் உள்ள பிளேட்டன் மெசின் மைண்டர் உடன் தேவை. நாள் வேதனம் ரூபா 80/ கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். ஸ்ரீ லங்கா அச்சகம், 234 A கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். சி-3033

சுன்னாகம்
பல நோ. கூ. சங்கம்
(வரையறுள்ளது)
சுன்னாகம்.

### அறிவித்தல்

எமது சங்க 24/1172 இலக்க இசுசு லொறியிலிருந்து கழற்றப்பட்ட பின்வரும் பொருட்கள் 7-7-89ந் திகதி முற்பகல் 10-00மணிக்கு சங்க தலைமை அலுவலக முன்றலில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

1. 22 ஸ்ரீ மொடல் இசுசு என்ஜின்.
2. 22 ஸ்ரீ மொடல் இசுசு போனெற் செற்.
3. உடற்கோப்பு.

சங்க அரிசியாலை முன்றலில் வைத்து விற்கப்படும்.

பொதுமுகாமையாளர்,
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
01-07-89 (எ-323)

# குடும்ப விபரக் கொத்து படிவங்கள் வந்தன

[சுண்டுக்குளி]

சனசக்தி திட்ட குடும்ப விபரக் கொத்து படிவங்கள் கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் விமான மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளன.

சனசக்தி திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களின் விபரங்களைப் பதிவு செய்வதற்காகவே இவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ், செயலக திட்டமிடல் பகுதி உத்தியோகத்தர்கள் யாழ் மாவட்டத்திலுள்ள 13 உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும் இப்படிவங்களை விநியோகித்து வருகின்றனர்.

# சுய முயற்சிகளுக்கு கடன் அடிப்படையில் நிதி உதவி கிடைக்கும்

(சுன்னாகம்)

அத்தியாவசியமாக நிதி உதவி தேவைப்பட்டவர்களுக்கு ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐக்கிய நாணய சங்கம் கடன் அடிப்படையில் நிதி உதவி அளித்து வருகின்றது.

பாதிப்பிற்குள்ளான வீடுகளைத்திருத்த சுயமுயற்சியின் பொருட்டு சைக்கிள் வாங்கிக் கொள்ள விவசாயத்தொழிலை விருத்தி செய்ய ஆகியன போன்ற பல்வேறுபட்ட காரணங்களுக்காக கடன் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வே நாட்டு நிதி நிறுவனம், மற்றும் உலக நிதி நிறுவனங்கள் மூலமான வழங்கப்பட்ட பணத்தில் சம்மேளத்திலிருந்து 1,70,000 ரூபா பன்னிரண்டு வீத வட்டிக்குக்கடனாக வாங்கப்பட்டு உதவி தேவைப்பட்டவர்களுக்கு பதின்நான்கு வீத வட்டியில் கடன் வழங்கப்படுவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

கடனாகப் பெற்ற பணத்தில் ஆறு மாதங்களுக்கொரு தடவை 42,500 ரூபாவை சம்மேளத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தவிர சுயமுயற்சிக் கடன், வறிய மகளிர்கடன் ஆகிய திட்டங்களுக்குக் கீழும் கடன் வழங்கப்படுவதாகவும் இந்த ஐக்கிய நாணய சங்கத்தின் உறுப்பினர்கள் சங்கத்தின் கோட்பாடுகளுக்கு அமைவாக பெற்ற கடனை மாதந்தோறும் செலுத்தி வருவதாகவும் இதனால் மேலும் பலர் கடன்பெறவாய்ப்பு ஏற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

UNIVERSITY OF JAFFNA

## TENDER NOTICE

Tenders are invited from contractors registered with University of Jaffna for the following works.

1. Electrical work at Library. (Registered for electrical wiring installation & maintenance of electrical equipment.)
2. Furniture work at Chemistry Department (Registered for supply and fixing fixed timber furniture.)

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 10-7-1989 between 9-00 a. m. to 3-00 p. m. on producing a receipt from Bursar, University of Jaffna or the non-refundable tender fee of Rs. 100/- for each tender.

The perfected tenders should be sent to reach the Works Engineer, University of Jaffna on or before 24-7-1989 at 2-00 p. m.

Tender board of University of Jaffna reserves the right to reject any tender.

ACTG. REGISTRAR
UNIVERSITY OF JAFFNA,
THIRUNELVELY.
JAFFNA.
(A 316)

### பழைய மாணவிகள் சங்கக் கூட்டம்

(சுன்னாகம்)

மானிப்பாய் மகளிர்கல்லூரி பழைய மாணவிகள் சங்கப் பொதுக்கூட்டம் இன்று 1-ம் திகதி முற்பகல் கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி கல்யாணசுந்தரேசன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

### சுகாதாரநிலையங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

கல்குடா, மட்டக்களப்புப் பகுதிகளில் இந்த நிலையங்கள் அமைக்கப்படும் என்று பிராந்திய சுகாதார சேவைகள்பணிப்பாளர் டாக்டர் ஆரி. அருளானந்தம் தெரிவிக்கின்றார்,

துரித விற்பனையாகிறது!

### "வல்லிபுரமாயன் போற்றி"

திரு. அகவல் (மலிவுப் பதிப்பு)

நூலாசிரியர்: பண்டிதர் மு. கந்தையா பி. ஏ.

வெளியீடு: நாவுக்கரசு பதிப்பகம்
சரசாலை, சாவகச்சேரி.

விலை ரூபா 2-50.

கிடைக்கும் இடங்கள்:
வல்லிபுர ஆழ்வார் ஆலயம்.
சிவம் மெடிக்கல்ஸ் ஸ்ரோர்ஸ் & புத்தகசாலை
சாவகச்சேரி.
திரு. ச. சாவணபவானந்தன்
(சரசாலை இந்து இளைஞர் மன்றம்),
ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(சி 3026)

### மகளிர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் ''பெண்களது உரிமைகளும் சமூகத்தில் அவர்களது பங்கும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று காலை நல்லைஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குநர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் சட்டத்தரணி ராஜ ராஜேஸ்வரன் தங்கராஜா டாக்டர் செல்வி சண்முகம் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

## யாழ் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் பதவி வெற்றிடம்

மேற்படி பதவிக்கு கீழ்வரும் தகைமைகளில் ஏதாவதொன்றைப் பெற்றிருக்கும் பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

இலங்கை கல்வி நிர்வாகசேவை தரம் மூன்று அல்லது அதற்கு உயர்ந்த தரம்
அல்லது
இலங்கை கல்வி நிர்வாக சேவை அல்லாத முதலாம் தர அதிபர்
அல்லது
1 ஏபி, 1 சி தரமுடைய பாடசாலைகளில் அதிபர் கடமை புரிபவர்.

விண்ணப்பங்கள் யாவும் பூரண சுய விபரங்களுடன் 14-7-89ந் திகதிக்கு முன்னர், பதிவுத் தபால்மூலம். பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை யாழ். கல்வித்திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் பதவி விண்ணப்பம்'' எனக் குறிப்பிடல் வேண்டும்,

செல்வி தி. பெரியதம்பி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1989-07-01. (எ-324)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திரு. நாகலிங்கம் அப்பையா
(மண்கும்பான்)

பூமியில் மலர்வு; 05-08-1934
சுவர்க்கம் புகுர்வு; 01-06-1989

அன்பாலும் பண்பாலும் எம்மை அரவணைத்துக் காத்த எம் உயிரிலும் இனிய ஐயாவே, எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டீரே, நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து 31 நாட்கள் கடந்தாலும் உங்கள் இனிய நினைவுகள் எம் இதயங்களில் என்றென்றும் அழியாமல் நிலைத்து நிற்கும்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 01-07-1989 இல் சாட்டி வெள்ளைக் கடற்கரையில் நடைபெறும் அந்தி சாஸ்திரத்திலும், வீட்டில் நடைபெறும் நினைவுக்கிரியைகளிலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள் (மக்கள்),
மருமக்கள்.

[சி-3038]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவுக்கு செயற்கைக்கோள் ஏற்றுமதி, அணுசக்தி ஒத்துழைப்பு நிறுத்தம்!

## அமெரிக்க பிரதிநிதிகள் சபை தீர்மானம்

(வாஷிங்டன்)

**சீனாவுக்கு தகவல் தொடர்பு செயற்கைக் கோள்களை ஏற்றுமதி செய்வது, சீனாவின் ஆக்கபூர்வ பணிகளுக்கு அணுசக்தியை பயன்படுத்துவதில் ஒத்துழைப்பு வழங்குவது, சீனாவில் அமெரிக்க தனியார் முதலீடுகளை நிறுத்துவது ஆகிய பணிகளை உடனடியாக நிறுத்துவது தொடர்பான ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ்ஷின் திட்டத்திற்கு அமெரிக்க பிரதிநிதிகள் சபை ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

இதுதொடர்பான திருத்த மசோதா ஒன்று பிரதிநிதிகள் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்த வெளிநாட்டு உதவி திருத்த மசோதாவுக்கு சபையில் 418 பேர் ஆதரவாக வாக்களித்தனர், எவருமே எதிர்க்கவில்லை.

இத்திருத்த மசோதா சட்டமாவதற்கு முன்னர் இம் மசோதா செனட் சபையின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்படும் என்றும் சிலவேளை இம் மசோதா செனட்சபையால் நிராகரிக்கப்படலாம் என்றும் கருதப்படுகிறது.

## ரதோற்சவம்

[சுண்டுக்குளி]

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த விநாயகர் கோவில் ரதோற்சவம் நாளை நடைபெறவுள்ளது. காலை 9 மணியளவில் வசந்த மண்டபப்பூசையாகி நண்பகல் ஒரு மணியளவில் ரதோற்சவம் இடம்பெறவுள்ளது.

## "பேச்சுவார்த்தை நடத்தி அமைதிப்படை விலகலுக்கு திகதிநிர்ணயிக்கவேண்டும்"

### இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கருத்து

(புதுடில்லி)

''இலங்கையிலிருந்து இந்தியா தமது படைகளை வாபஸ்பெறவேண்டும். இதற்கான கால அட்டவணையை இலங்கை – இந்திய அரசுகள் பேச்சுவார்த்தை நடத்தி நிர்ணயித்துக்கொள்ளவேண்டும். இதுதவிர இந்தியாவுக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## "இலங்கைத் தமிழர் பிரச்னை இந்திய விவகாரம் அல்ல"

### குல்திப் நாயர் கருத்து

[புதுடில்லி]

''இலங்கைத்தமிழர்பிரச்னை இலங்கை அரசியல்விவகாரமே இது இந்திய அரசின் பிரச்னை அல்ல என்பதை இந்தியா உணரவேண்டும்.''

இவ்வாறு இந்திய அரசியல்

(6-ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவுக்கு இந்து சமுத்திரத்தில் ஆபத்து குறைந்துள்ளதாம்!

### போர்க்கப்பல் எண்ணிக்கையைக் குறைக்க முடிவு

(வாஷிங்டன்)

அமெரிக்காஇந்துசமுத்திரத்தில் தனது கடற்படை ரோந்து நடவடிக்கைகளைக் குறைக்கத் தீர்மானித்துள்ளது என வாஷிங்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்து சமுத்திரத்தில் அமெரிக்காவின் நலனுக்கு ஆபத்து குறைந்துள்ளதாலே அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு மேற்சொன்ன தீர்மானத்தை எடுத்துள்ளது என்றும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் இந்தத் தீர்மானத்துக்கமையஇவ்வாண்டு இறுதியில் இந்து சமுத்திரத்தில் ரோந்துநடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அமெரிக்க போர்க்கப்பல்களின் எண்ணிக்கை குறைக்கப்படுமென அமெரிக்க பாதுகாப்பு திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்து சமுத்திரத்தில் தற்போது ஒரு விமானந்தாங்கிக் கப்பலும், 21 போர்க்கப்பல்களும் ரோந்துச் சேவையில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு எதிர்ப்புகள் சீனக் கொள்கையைப் பாதிக்காது

### சீனப் பிரதமர் கூறுகிறார்

(பீக்கிங்)

''வெளிநாட்டினரின் கண்டனங்களும் எதிர் நடவடிக்கைகளும் மிரட்டல்களும் சீனாவின் கொள்கைகளை எது விதத்திலும் பாதிக்காது.''

இவ்வாறு சீனப் பிரதமர் திரு. லீ பெங் தெரிவித்துள்ளார்.

''சீனமாணவர் ஆர்ப்பாட்டம் முழுக்க முழுக்க உள்நாட்டு விவகாரமே. எமது உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாடுகள் குறிப்பாக மேற்குநாடுகள் தலையிட்டு வருகின்றன'' என்றும் அவர்கூறினார்.

# "'அக்னி' ஏவுகணைப் பரிசோதனைக்கு வெளியார் அச்சுறுத்தல் இருந்தது"

## எவரது அச்சுறுத்தலுக்கும் இந்தியா பணியாது

### என்றும் கூறுகிறார் ராஜீவ் காந்தி

(புதுடில்லி)

'அக்னி' ஏவுகணை பரீட்சித்துப்பார்க்கப்படுமானால் இந்தியா மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எம்மீது அச்சுறுத்தல்விடுக்கப்பட்டது. அந்த அச்சுறுத்தலுக்குப்பணியாமலேயே நாம் 'அக்னி' பரிசோதனையை வெற்றிகரமாக நிறைவேற்றினோம்.''

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இந்தூரில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:–

'அக்னி' ஏவுகணை பரிசோதனையை நிறுத்தும் முயற்சியில் ஒரு சில அயல்நாடுகள் ஈடுபட்டன. இதுகுறித்து அந்த நாட்டுத் தூதுவர்கள் எமது அதிகாரிகளை அணுகினார்கள்.

'அக்னி' ஏவுகணை பரிசோதனையை வெளிநாட்டினர் மட்டுமல்ல, ஒருசில எதிர்க்கட்சித்தலைவர்களுமே எதிர்த்துவந்தனர். இரண்டு ஆண்டு காலமாக இதனை எதிர்த்துவந்த எதிர்க்கட்சியினர் 'அக்னி' பரிசோதனை வெற்றிகரமாக இடம்பெற்ற பின்னர் இப்போது பாராட்டியுள்ளனர்.

**வல்லரசுகளின் நிர்ப்பந்தத்திற்குப் பணியமாட்டோம்**

''எந்த ஒரு வல்லரசின் நிர்ப்பந்தத்திற்கும் இந்தியா அடிபணியாது. வெளிநாடுகளிலிருந்துவரும் எந்த நெருக்கடியையும் எதிர்த்து நிற்கும் அளவுக்கு இந்தியா இன்று வலிமையுடன் இருக்கிறது.''

## அ.தி.மு.க.துணைப் பொதுச்செயலர் விடுதலை

(சென்னை)

தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதியின் திருச்சி, தஞ்சாவூர் விஜயத்தை அடுத்து கைது செய்யப்பட்ட அ. தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் திரு. எஸ். ரி. சோமசுந்தரம் நேற்றுமுன்தினம் மாலை விடுதலை செய்யப்பட்டார்.

சில தினங்களுக்கு முன்பு திரு. சோமசுந்தரத்துடன் கைது செய்யப்பட்ட 800 அ. தி. மு. கவினரும் விடுதலை செய்யப்பட்டனர்.

## மாணவிகளுக்கு இலவச சட்ட பட்டப் படிப்பு

(சென்னை)

தமிழகத்தில் ஏழை, நடுத்தர வகுப்புமாணவிகளுக்குஇலவசமாக சட்டபட்டப் படிப்பு படிப்பிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

## போதைவஸ்து கடத்தல்: கியூபா மந்திரி பதவிநீக்கம்

(ஹவானா)

போதை வஸ்து கடத்தல் ஊழல் நடவடிக்கை தொடர்பாககியூபா உள்துறை அமைச்சர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அதிபர் ஜெனரல் பிடல் காஸ்ட்ரோ தலைமையிலான அமைச்சரவையில் அதிமுக்கிய இடத்தை வகிக்கும் உள்துறை அமைச்சர் ஜெனரல்

(6-ம் பக்கம் பார்க்க)

## லெபனான் - எகிப்து மீண்டும் ராஜதந்திர உறவு

(பெய்ரூட்)

10 ஆண்டுகளுக்குப் பின்னர் லெபனான் எகிப்துடன் மீண்டும் ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

1979ம் ஆண்டு எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் 'காம்ப் டேவிட்' அமைதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை எதிர்க்கும் வகையில் லெபனான் உட்பட பல அரபு நாடுகள் எகிப்துடனான ராஜதந்திர உறவுகளைத் துண்டித்துக்கொண்டன,

தற்போது சிரியாவும் லிபியாவுமே எகிப்துடன் ராஜதந்திர உறவுகளை வைத்திருக்கவில்லை.

## பற் சிகிச்சை நிலையம்

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் அப்பகுதி பொதுமக்களின் நலனை முன்னிட்டு பற்சிகிச்சை நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு யாழ். சுகாதார திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் அ. செல்வராஜா இது தொடர்பாக மேலிடத்திற்கு விடுத்திருந்த கோரிக்கையைஅடுத்து யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றார்.

## கண்டி மன்னனுக்கு வேலூரில் முத்துமண்டபம்

### தமிழக அரசு அமைக்கிறது

(சென்னை)

கண்டியை ஆண்ட கடைசி தமிழ் மன்னன் இராஜசிங்கனின் நினைவாக தமிழ்நாட்டில் முத்துமண்டபம்ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இத்தகவலை தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார்.

வேலூரில் இந்த முத்துமண்டபத்தை அமைக்க தமிழக அரசுநடவடிக்கை எடுத்துவருகிறது என்றும் திரு. கருணாநிதி தெரிவித்தார்.

## தமிழகத்தில் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகம் ஜூலை 12-ல் திறக்கப்படும்

(சென்னை)

சென்னையில் எம். ஜி. ஆர். பல்கலைக்கழகம் அடுத்தமாதம் 12-ம் திகதி திறக்கப்படும் என தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார். தமிழக அமைச்சரவைக் கூட்டத்தின் பின் பத்திரிகையாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மொழிவாரி, இனவாரி சிறுபான்மை மக்களின் நலன்களைக் கவனிப்பதற்காக 'சிறுபான்மையினர் குழு' ஒன்று அமைக்கப்படும் என்றும் திரு. கருணாநிதி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சாத்வீக எதிர்ப்பு எல்லா முனையிலும் கூருடைய வாள். அது எதிரியையும், ஒரு சொட்டு ரத்தம் கூடச் சிந்தவிடாமல் வாழ்த்தும், அது துருப்பிடித்துவிடாது. அதனைத் திருடமுடியாது. யாரும் பறித்துவிடவும்முடியாது.

— மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## பொலிவியா தரும் பாடம்!

அண்மையில் தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் தேர்தல் நடைபெற்றிருக்கின்றது. அந்த நாட்டுப் பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார்கள். வரும் ஆகஸ்டில் இந்த உறுப்பினர்கள் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பார்கள்.

இந்தத் தேர்தலின் புதுமை என்ன? தற்போது ஜனாதிபதியாக இருப்பவர் என்டன் சொரே. அவரின் ஆதரவாளர்கள் பலரே வெற்றிபெற்றிருக்கிறார்கள். மூன்றில் இரண்டு ஆசனங்களை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். வேலை நிறுத்தங்கள், கிளர்ச்சிகள் பலவற்றை அடக்கியிருக்கிறார். அவருக்கா இந்த மதிப்பு? காரணம் என்ன?

ஏனைய மூன்றாவது மண்டல நாடுகளைப்போல பொலிவியாவிலும் பொருளாதார நெருக்கடி. இலத்தீன் அமெரிக்க நாடுகளிலே மிகவும் பின்தங்கிய நாடாக இது இருந்திருக்கின்றது. 1978 முதல் 1982க்கிடையில்— அதாவது நாலாண்டுகளில்- ஒன்பது அரசாங்கங்களைக் கண்டிருந்தது; அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நாடாகக் கணிக்கப்பட்டது. ஆனால், கடந்த ஏழு ஆண்டுகளாக நிலையான அரசாங்கம் இருந்துவருகின்றது. ஜனநாயகம் காலூன்றி இருக்கின்றது. எனினும், நாலாண்டுகளுக்கு முன் அந்த நாடுகண்ட பொருளாதார நெருக்கடி உலகப் பிரசித்தம். நம்பமுடியாத அளவிற்குப் பணவீக்கம்; 24000 சத வீதம் எனக் கணிக்கிட்டிருந்தார்கள்!

இந்த நாடு எப்படி அந்த நெருக்கடியைச் சமாளித்தது? வறிய நாடுகள் படிக்க வேண்டிய பல பாடங்கள் அங்குள்ளன. பொருளாதார வெற்றிக்குக் காலாக இருந்திருக்கின்றார் ஜனாதிபதி என்டன் சொரே. மக்களை உடனடியாகத் திருப்திப் படுத்தும் குறுகிய காலத்திட்டங்களை உருவாக்கவில்லை. தூரப்பார்வை இருந்திருக்கின்றது. நீண்டகாலத் திட்டங்களையே நடைமுறைப்படுத்தினார்.

ஆள்பவனுக்கு இருக்க வேண்டிய குணதிசயங்களைத் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வகுத்துத் தந்தார். அவர்வகுத்த இலக்கணத்திற்கு இலககியமாகியுள்ளார் என்டன் சொரே!

திருக்குறள் வகுத்த இலக்கணம் என்ன?

''தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலன் ஆள்பவற்கு''

அவர் துணிந்து நடவடிக்கை எடுத்தார்; அறிவோடு (உணர்ச்சிகளுக்கு அடிமையாகாது) செயற்பட்டார்; விரைவாகக் (தூங்காது) கருமம் ஆற்றினார்.

செய்தது என்ன? முதலில் 95 சத வீதம் பணத்தின் பெறுமதியை இறக்கம் செய்தார். விலை தளம்பாதிருக்க அரசு வழங்கிவந்த மானிய உதவியை நிறுத்தினார். சம்பளங்களைக் கட்டுப்படுத்தினார். அரச நிர்வாகத்திலுள்ள இருபத்தொரு சுரங்கங்களில் பதினேழு நட்டத்தில் இயங்கி வந்தன. அவற்றை உடனடியாக மூடினார்: இதனால் இருபத்துமூவாயிரம் பேர் வேலை இழந்தனர்.

பாதிக்கப்பட்டவர்கள், வேலை இழந்தவர்கள் சும்மா இருப்பார்களா? வேலை நிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்தன. நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்தார்; தொழிற்சங்கத் தலைவர்களைச் சிறையில் இட்டார்.

பனையால் விழுந்தவனை மாடேறி உழக்கியதாம்! பிரதான உற்பத்தியான வெள்ளீயத்திற்கும் இயற்கை வாயுவிற்கும் உலகச்சந்தை விலை இறங்கியது, பலத்த அடியாக இருந்தது. இரண்டாவது முறையாகவும் வேலைநிறுத்தங்களும், ஆர்ப்பாட்டங்களும், துணிவுடைமை கைகொடுத்தது; மீண்டும் கடும் நடவடிக்கைகள்.

விரைவில் நற்பலன் கிட்டியது. ஐரோப்பிய நாடுகளும் உலக வங்கியும் நூறு மில்லியன் டொலர் கடன் வழங்கிக் கைதூக்கியது. பொதுவேலைகள் தொடங்கின; வேலை இழந்தவர்கள் வேலைபெற்றனர். பொருளாதாரம் தலைதூக்கியது. பணவீக்கம் 15சத வீதத்திற்குக் குறைந்தவிட்டது.

அவர் எழுதிய பாடத்தை அப்படியே பார்த்தெழுத வேண்டும் என்பது எமது கருத்தல்ல. தேர்தலைக் குறியாக வைக்காது, மக்களைத் திருப்திப்படுத்த நினைக்காது, நிலையான பொருளாதார நடவடிக்கைளைத் துணிந்து. அறிவோடு, தூங்காமல் எடுக்க வேண்டும்.

இதுதான் பொலிவியா தரும் பாடமா?

## பத்திரிகை வான் தீயிடப்பட்டது!

(கொழும்பு)

தென்பகுதி பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமாகனபத்திரிகை விநியோகிக்கும் வான் ஒன்று இனத்தெரியாதவர்களினால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

பதுளையில் பத்திரிகைகளை விநியோகித்துவிட்டு கொழும்புக்குத்திரும்பிக்கொண்டிருந்த போது கொஸ்கம என்ற இடத்தில் இந்த வான் மறிக்கப்பட்டுத் தீவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வானிலிருந்தவர்களை இறக்கியபின்பே தீவைக்கப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## "மதிய உணவால் மாணவரின் உடல், உள்ளம் வளர்ச்சிகாண வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

''மாணவர்களுக்கான மதிய உணவு, மதிய உணவாக அமையவேண்டும், அரிசி, தானிய வகைகளிலிருந்து அது தயாரிக்கப்படவேண்டும். அறுநூறு முதல் எண்ணூறு வரையிலான கலோரிகள் சக்தியை கொண்டதாகவும் அதுஇருக்க வேண்டும். கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மாணவர் ஒருவருக்கு மூன்று ரூபா வீதம் வழங்கப்படும்போது, மதிய சத்துணவு திட்டத்தைச் செயற்படுத்துவது கடினமே.''

அண்மையில் நடைபெற்ற பளை கொத்தணி அதிபர்கள் கூட்டத்தில் கொத்தணி அதிபர் திரு. அ. பொ. செல்லையா இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது;

''மூன்று ரூபா அடிப்படையில் மதிய உணவைத் தயாரிப்பதில் சிறிய பள்ளிக்கூடங்களில் அவ்வளவு பிரச்னைகள் ஏற்படாது என்றாலும், ஆயிரம், மாணவர்களுக்கு அதிகமாயுள்ள பாடசாலைகளில் என்னசெய்ய முடியும்?

''செலவைக் காட்டலாம். ஆனால் காட்டப்பட்ட செலவில் மாணவர்களின் உடல், உள்ளம் வளர்ந்ததா என்பதே கேள்வி.

''மதிய உணவுத் திட்டம் மாணவர்களுக்கு நல்லது எனினும், அரசு நல்லதோர் மாற்றுத்திட்டத்தைகொண்டு வந்து அதிபர், ஆசிரியர்களின் வேலைப்பழுவைக் குறைக்க வேண்டும்.

''அதிபர் ஆசிரியர்களின் வேலைப்பழுவைக் குறைத்தால் மாணவர்களின் கல்விப்போத

(6-ம் பக்கம் பார்க்க)

## 'கதிர்காம உற்சவகாலத்தில் உயிர்க்கொலையை நிறுத்துக'

(யாழ்ப்பாணம்)

''எல்லாஉயிர்களும் பிறவிப் பெரும்பயனைப் பெற்றுக் கொள்ள, உயிர்க்கொலைகளை நிறுத்தும் வகையில் கதிர்காம உற்சவகாலத்தில் இந்த மாதம் 3-ம் திகதி முதல் 18-ம் திகதிவரை சுக்கிலவருஷ பௌர்ணமி தினங்களிலும், பொசன் போயா பௌர்ணமி தினங்களிலும் இறைச்சிக்காக உயிரினங்களைக் கொல்லும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு இலங்கையிலுள்ள சகல சமய மக்களுக்கும்அன்பானவேண்டுகோளை வெளிப்படுத்துவதுடன், செயல்படுத்துமாறு கோருகின்றோம்'' என்று யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை கதிர்காமதியவறன நிலமேக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளது.

பேரவைத்தலைவர் திரு. வி. கே. தனபாலன் அனுப்பிவைத்துள்ள இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''சிவமந்திரமாகிய திருநீறு எல்லோரும் அணிவதன் மூலம் இந்நாட்டில் ஏற்பட்ட அவலமான சம்பவங்கள் மேலும் வளராமல் தடுக்கும் மருந்து முருகன் பெரும்புகழைப் பாடிப் பரப்புதலாகும். இக்காலத்தில் கதிர்காம முருகன் பாடல்களை இலங்கையிலும், உலகமக்கள் மத்தியிலும் ஒலிக்க அகண்டமாகச் செயற்படுமாறு அன்புக் கருத்தை வெளிப்படுத்துக. இறைவனது அருள் கொடையாகவும் கொல்லக்கூடாதுமான பசுக்கூட்டத்தைப் பாதுகாக்கவும் இந்நாட்டில் நீடித்த அமைதி தோன்றவும் மாட்டிறைச்சிக் கடைகளை தொடர்ந்து மூடுமாறு அன்புடன் வேண்டிக் கொள்க. இந்துசமய, பௌத்த சமயக்கருத்துக்களை ஒருமுகப்படுத்தி சிவபெருமானது சிந்தனையை வெளிப்படுத்தும் போது எல்லாச் சமயங்களும் அமைதியை நாடிச்சென்று அன்புருவாகும் நிலையை ஏற்படுத்துக. உயிர்க்கொலைகளை நிறுத்துவதன் ஊடாக உண்மைப்பொருளை கண்டுகொள்வதற்கு உன்னதகாலமாகும். கந்தன் புகழ் கலியுகத்தில் நிலைத்திட கருணை கொண்டு செயற்படுக. இந்து சமய. பௌத்தசமய மக்களை பூர்வீகமாகக்கொண்ட தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் அமைதி நிலவுவதற்கு எத்தகைய சமய மாற்ற நடவடிக்கைகளும் வளர்வது இந்நாட்டின் அமைதியின்மையை மேலும் வளர்ப்பதாக அமைவதனால் பிறப்பினாலும், சூழலினாலும் பின்பற்றப்படும் நல்லொழுக்கங்களை சிதைக்காது செயற்படுக.''

## கூட்டுறவு ஊழியர் அடையாள வேலைநிறுத்தம்

[பண்டத்தரிப்பு]

சங்கப் பணியாளர்களுக்கு 260 ரூபா அலவன்ஸ் வழங்குவது தொடர்பாக பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க நிர்வாகத்திற்கும் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் பண்டத்தரிப்பு கிளை நிர்வாகிகளுக்குமிடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் நடைமுறைப் படுத்தப்படாததை ஆட்சேபித்து நாளை மறுதினம் திங்கட்கிழமை ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்வதென்று கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் பண்டத்தரிப்பு கிளை தீர்மானித்துள்ளது.

கடந்த 29-ம் திகதி வியாழக்கிழமை கிளைத் தலைவர் திரு. நா. வ. சிவபாதம் தலைமையில் நடைபெற்ற கிளையின் விசேட செயற்குழுக் கூட்டத்தில் இந்த அடையாள வேலை நிறுத்தத்துக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக கிளையின் செயலாளர் திரு. சி. மகேந்திரன் இதுபற்றி தகவல்தெரிவித்தார்.

## பளைமகாவித்தியாலயத்துக்கு கல்வி அதிகாரி பாராட்டு

(யாழ்ப்பாணம்)

''கிளிநொச்சிகல்வி மாவட்டத்தின் அங்கமாகப்பளைமகா வித்தியாலயம் இருந்தபோதிலும், யாழ். குடாநாட்டிலுள்ள புகழ் வாய்ந்த கல்லூரிகளுக்கு ஈடாகவும், மேலாகவும் க. பொ. த. சாதாரணப் பரீட்சை பெறுபேறுகளை அது பெற்றிருப்பது குறித்து எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

கல்வியதிகாரி ஜனுப். எஸ். ஏ. சி. எம். இஞநா இவ்வாறு பளை மகாவித்தியாலயத்தைப் பாராட்டியிருக்கிறார்.

அண்மையில் வெளியான க. பொ. த. சாதாரணதராதர பரீட்சை பெறுபேறுகளின்படி மேற்படி பாடசாலையில் இரு மாணவர்கள் ஐந்து பாடங்களில் அதிதிறமை சித்திபெற்றுள்ளனர்.

அத்துடன் பல மாணவர்கள் மூன்று முதல் நான்கு பாடங்களிலும் அதிதிறமை சித்தி பெற்றுள்ளனர். புதிய பாடத்திட்டத்தில் பதினேழு மாணவர்கள் உயர்வகுப்புக்குச்செல்ல தகுதி பெற்றுள்ளனர்.

## 75வீதமாணவர் தகுதிபெற்றனர்

(யாழ்ப்பாணம்)

கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் யாழ்ப்பாணக் கல்லூரியில் இருமாணவர்கள் ஆறுபாடங்களிலும் அதி திறமைச் சித்தி பெற்றுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் எழுபத்தைந்து வீதமானவர்கள் உயர்தர வகுப்பில் கல்வி கற்கத் தகுதிபெற்றுள்ளனர். சமூகக் கல்வியில் முப்பத்தேழு வீதமானவர்கள் அதி திறமைச் சித்தி பெற்றுள்ளனர்.

# பலதும் பத்தும்

### கேள்வி தயாரா?

''வேறு கிரக மனிதரைத் திடீரெனச் சந்தித்தால் முதலில் என்ன கேள்வி கேட்பீர்கள்?'' – சோவியத்தில் மின்ஸ்க் என்ற நகரில்நடந்த விஞ்ஞானிகள் கருத்தரங்கில் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது.

பறக்கும்தட்டு என்றால் என்ன? வேறு கிரகங்களில் வசிப்போர் இங்கு வந்து போகும் விசேடவிமானங்களாம். இவற்றைக் கண்டதாகப் பலர் கூறிவருகிறார்கள் பல ஆண்டுகளாக. இது வெறும் கதை என்பது சிலரது வாதம். மனப் பிறழ்வால்-மனக் கோளாறினால்– இப்படிக் கதை அளக்கிறார்கள் என்பது அவர்களது வாதம்.

ஆனால் இதுபற்றி நம்பிக்கை வைப்போர்தொகை அதிகரிக்கின்றது. சில விஞ்ஞானக்கண்காணிப்புக்கருவிகளில் ஏற்பட்ட பதிவுகளினால், விஞ்ஞானிகளின் கவனம் இவ்விடயத்தில் திரும்பியிருக்கின்றது எனவே ஆய்வுகள் தொடர்கின்றன. அவதான நிலையங்களில் இது பற்றியும் அவதானித்துத் தகவல்கள் சேகரிக்கும்படியும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன.

என்ன கேள்விகளைக் கேட்பார்களாம்? ''தோழரே வருக; எமக்கிருக்கும் பொதுவான மூளைத் திறனைப் பாவித்து, முன்னேற ஒத்துழைப்பு வழங்குவீரா?''– இது புவியியல் அறிஞர் கூறியது. ''பூமிக்கு வரவேற்கிறேன்; நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள் என்பதை எனது கணிதச் சூத்திரங்கள்மூலம் கண்டுபிடித்துக் கூறட்டுமா?''-இது பொறியியலாளர் கூறியது.

சரி, நீங்கள் சந்தித்தால் என்ன கேட்பீர்கள்? கேள்வி தயாரா?

வாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் பல. நோ. கூ. சங்கம் வரையுள்ளது

### பதவி வெற்றிடம்

## பதவி-பொது முகாமையாளர்

**-101.7(சு. நி. 165/88)**

மேற்படி பதவிக்கு ஆண் பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவு திகதி: 19-07-1989.

**சம்பள அளவுத் திட்டம்:**

1505 — 2555
75 6 — 100 6

அத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட விசேட படிகளும் சேர்த்து வழங்கப்படும்.

**வயது எல்லை:**

30 — 50 வரை.

**பிணைப்பணம்:**

உரொக்கம் ரூபா 10,000/-
ஆதனப் பிணை ரூபா 25,000/-

இதற்கு மேலதிகமாகப் பிணை செலுத்த வேண்டிய அவசியம் ஏற்படின் சங்கத்தால் கேட்கப்படுமிடத்து அதை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

**கல்வி மற்றும் தகமைகள்**

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 8வது சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடத்திற்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 9வது சம்பளத் திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 06 வருடங்கட்கும் குறையாத அனுபவம்,

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றின்பட்டதாரிஅல்லது அதற்கு இணையான பட்டத்துடன், அங்கீகரிக்கப்பட்டவர்த்தக/தொழில் நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 06 வருடங்கட்குக் குறையாத அனுபவம்

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தரரதரப் பத்திரம் (உயர்தரம்) க. பொ. த. (உயர்தரம்) இல் 03 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 08 வருடங்கட்குக் குறையாத அனுபவம்.

**குறிப்பு**

(1) விண்ணப்பங்கள் யாவும் எமது காரியாலயத்திலிருந்து பெறப்படும் விண்ணப்பப் பத்திரங்களில் மாத்திரம்நிரப்பி அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் பிரதிகளும், வசிப்பிடத் தகமை, பிறப்புச்சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படாவிடில் அந்தவிளக்கம் குறித்து அத்தாட்சிப் படுத்தும் கடிதமும், நற்சான்றிதழ் பிரதிகள் இரண்டும், விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

(3) சங்க எல்லைப்பரப்புக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(4) விண்ணப்பப் படிவங்கள் யாவும் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவக் கடித மேலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பொது முகாமையாளருக்கான பதவி விண்ணப்பம்'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(5) மேலதிக விபரங்கட்கு சங்க காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்.**

யாழ். ப. நோ. கூ.
சங்கம் - வது
259, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

01- 07- 1989

ஏ- 322


# தமிழ்ப் பிரதேசத்தில் கடந்தகால வன்செயல்களால் 700 பேர் அங்கவீனர்கள்

நாட்டில் கடந்த காலங்களில் நிகழ்ந்த வன்செயலின் போது, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் மக்களுள் பலர் கால்களையும், கைகளையும் இழந்து அங்கவீனர்களாகி இன்று பரிதாபகரமான நிலைக்குத்தள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த அவல நிலையில் வாழ்கின்றவர்கள் சுமார் எழுநூறு பேர் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இவர்களுள் கால்களை இழந்தவர்களே பெரும்பாலானர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சேவை மனப்பான்மையும்-பரிந்துணர்வும் கொண்டயாழ் அன்னையர்கள் சிலர், அங்கவீனமடைந்தவர்களின் எதிர்கால வாழ்க்கையை ஒளிமயமாக மிளிரச்செய்யவேண்டுமென்று வெகு துரிதமாகச் செயல்பட்டனர்.

திரு. ஜோன் டாக் கச்சிசனுடன் கலந்துரையாடி தமிழ்ப் பகுதியில் அங்கவீனர்களுககு உதவிசெய்யவேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணத்துக்கு 1986 முற்பகுதியில் வந்த கச்சின்ரு அன்னையர் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார்.

கொழும்பிலுள்ள ஜெய்ப்பூர் செயற்கைக் கால் பொருத்தும் தொழிற்சாலையின் செயலாளராகவும், கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் செயலாளராகவும் கடமையாற்றுகின்ற திருமதி சுவர்ணு பேர்டினன்ட் அதே ஆண்டு டிசம்பர் மாதம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

இவர் யாழ்ப்பாண அன்னையர்களுடன் குடாநாட்டின் பல பாகங்களுக்கும்சென்று நிலைமையை ஆராய்ந்தார். முதலில் தமிழ்ப் பகுதிகளில்

> **யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலை 2-வது ஆண்டு நிறைவை இன்று அடைந்துள்ளது. இது தொடர்பாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.**
>
> (ஆ-ர்)

—இது தாய்க் குலத்துக்குள்ள தனிப்பண்பு.

'எமது வாழ்க்கை நிலை எதிர்காலத்தில் எப்படி அமையப்போகின்றதே என்று ஏங்கித் தவியாயத் தவித்துது நினைந்து-நினைந்து மனம் புண்ணுகிக் கொண்டிருந்த இவர்களுக்கு அபயக் கரம் நீட்டினர்- வழிசமைத்துக்கொடுத்தனர் - அந்த அன்னையர்.

இந்தகைய பரிதாய நிலை எமது சமூகத்தில் இருந்து விடக்கூடாது; இவர்களும் வாழவேண்டும்.

அங்கவீனர்களுக்குச் செயற்கைக்கால் பொருத்தும் ஒரே ஒரு ஸ்தாபனம் கொழும்பில் இயங்கிவருவது இந்த அன்னையர்களின் கவனத்தை ஈர்த்தது.

நோர்வே தேசத்தின் ஆதரவுடன் இயங்கிய 'நொருட்' என்றழைக்கப்படும் சமூக சேவை ஸ்தாபனத்துடன் தொடர்புகொண்டனர். கொழும்பு நகரிலுள்ள செயற்கைக்கால் பொருத்தும் தொழிற்சாலையைஅணுகினர், அன்னையர்.

கொழும்பிலுள்ள செயற்கைக்கால் பொருத்தும் தொழிற்சாலையை கொழும்பு நட்புறவுச் சங்கமே நடத்தி வந்தது. இவர்களுடன், யாழ்ப்பாண அன்னையர்களுக்கு முன்னேடியாகச் செயல்பட்ட திருமதி தேம்பாகுணநாயகம். நோர்வே நாட்டின் 'நொருட்' ஸ்தாபனத்தின் அதிகாரியான உள்ள அங்கவீனர்களுக்குஉதவுவதற்கு தம்மாலான அனைத்துஉதவிகளையும்வழங்குவதாக உறுதியளித்தார்.

திருமதி சுவர்ணு தாம் அளித்த வாக்குறுதிக்கமைய ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் முதல் கட்டமாக இரண்டரை லட்சம் ரூபாவை யாழ்ப்பாணத்தில் அமைக்கவுள்ள ஜெய்ப்பூர் செயற்கைக் கால் பொருத்தும் தொழிற்சாலைக்கு வழங்கினர். அதே சமயம் இந்த செயற்கைக் கால் பொருத்துவோருக்கு பயிற்சி வழங்கவும் ஒழுங்கு செய்யப்பட்டது.

தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு கோப்பாய் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் அமரர் வன்னியசிங்கத்தின் துணைவியார் யாழ். நகரில் சுண்டிக்குளிப் பகுதியில் உள்ள தமது இல்லத்தைக் கொடுத்துதவினார்.

1987 ஜூலை முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் பொருத்தும் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. திருமதி சுவர்ணு பேர்டினன்ட் இத்தொழிற்சாலையை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

இத்தொழிற்சாலை இரண்டாம் ஆண்டை இன்று பூர்த்தி செய்து மூன்றாம் ஆண்டில் காலடி எடுத்துவைக்கிறது.

வடக்கு-கிழக்கில் சுமார் 700 பேர்வரை வன்செயல்களால் அங்கவீனர்களான போதிலும் இதுவரை 310 பேர் மட்டுமே யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் செயற்கைக் கால்பொருத்தும் தொழிற்சாலைக்கு உதவிகோரி விண்ணப்பித்துள்ளனர். கைகளை இழந்த சிலரும் இதனுள் அடங்குவர்.

இதுவரை கால்களை இழந்த 241 பேருக்கு கால் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் விண்ணப்பித்தவர்களுக்கு செயற்கைகால் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

செயற்கைகால் பொருத்துவதற்கு விண்ணப்பிப்பவர்களுள் பெரும்பாலானோர் மிகவும் வசதி குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

ஒரு செயற்கைக் காலைப் பொருத்துவதற்கு சுமார் 2500 ரூபா செலவாகிறது. ஆயினும் இத்தொழிற்சாலையின் நிர்வாகக்குழுவின் புரிந்துணர்வின் பேரில் ஒவ்வொரு விண்ணப்பதாரரிடமும் ஆயிரம் ரூபா மட்டுமே வசூலிக்கப்படுகிறது.

ஆயினும் வறுமை நிலையில் உள்ளவர்கள் இந்த ஆயிரம் ரூபாவைக்கூட முற்றுமுழுதாக செலுத்துவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

'செயற்கை கால் பொருத்த வருபவர்களிடம் கட்டாயமாகப் பணம் வசூலிக்க வேண்டும் என்பது எமது நோக்கமல்ல. அவர்களை சமூகத்தில் வாழவைப்பதே எமது குறிக்கோள்'' என இத்தொழிற்சாலையின் தலைவி திருமதி ரி. குணநாயகம் தெரிவிக்கிறார்.

'செயற்கைக் காலைப் பொருத்திவிட்டு அவர்கள் நடந்து பழகுவதற்கும் பயிற்சி அளிக்கிறோம். இப்பயிற்சி சுமார் இரண்டுவார காலத்துக்கு அளிக்கப்படுகிறது. இந்தக் காலத்தில் அவர்களுக்குஉணவு வழங்குகிறோம் இருப்பதற்கு வசதி செய்து கொடுக்கிறோம். அதுமட்டுமல்ல, செயற்கைக் காலில் ஏதாவது திருத்தங்கள் செய்யப்பட வேண்டி ஏற்படும் போதெல்லாம் அவைகளைச் சரிவர செய்து கொடுக்கிறோம்.



ஷெல் தாக்குதலின்போது காலை இழந்த கோப்பாயைச் சேர்ந்த நான்கு வயதுச் சிறுமி செல்வி ரி. தசாயினி யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலையில் கால் பொருத்திய பின்னர் நடந்து பயிற்சி பெறுவதை இங்கு காணலாம்.

### செயற்கை கை பொருத்த ரூபா 5, 000

கைகளை இழந்து ஊனமானவர்களுச்கும் இங்கு செயற்கை கைகள் பொருத்தபட்டுள்ளன. இதுவரை எட்டுப் பேருக்கு செயற்கைக் கைகள் பொருத்தப்பட்டுள்ளன. ஒரு செயற்கைக் கை பொருத்துவதற்கு சுமார் ஐயாயிரம் ரூபா செலவாகிறது.

இதுவரை செயற்கைக் கால் பொருத்தியவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்களாவர்.

வேடிக்கை பார்க்கப்போய் மிதி வெடிகளில் மிதித்து காலை இழந்தவர்களுக்கும் செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இத்தொழிற்சாலையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர், காரியாலய உதவியாளர்கள் உட்பட ஆறுபேர் கடமையாற்றுகிறார்கள். இவர்களுக்கு மிகவும் குறைந்த சம்பளமே வழங்கப்படுகிறது. ஏனையோர் வேதனம்பெறுமல்சமூகசேவையில் ஈடுபட்டுள்ளனர். செயற்கைக்கால் பொருத்திய இளம் பெண்மணி ஒருவரும் இக்காரியாலயத்தில் கடமையாற்றுகிறார்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் இந்த ஜெய்ப்பூர் செயற்கைக் கால் பொருத்தும் தொழிற்சாலை, எமது சமூகத்துக்கு அவசியம் தேவை என்பதால் இது தொடர்ந்து இயங்குவதற்கு எங்களாலான அனைத்து உதவிகளையும் வழங்கவேண்டும்.

இந்தியாவில் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பாதத்தை முதன்முதலில் நிர்மாணித்தவர் எலும்பு சிகிச்சை நிபுணரான டாக்டர் பி. கே. சேத்தி அவர்களாவர். இவரின் இந்த கண்டுபிடிப்பால் செலவு குறைவாகவும், விரைவாகவும் இந்த செயற்கைக் கால் பாதங்களை தயாரிக்க முடிவது குறிப்பிடத்தக்கது.

**- ஐ. சண் -**

# "ஏழைமக்களின்நலன்பேண முன்னின்று உழைத்தவர்"

## கோப்பாய் உதவி அரச அதிபர் மறைவுக்கு அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

''உதவி அரசாங்க அதிபர் குலேந்திராவின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என்று மறைந்த கோப்பாய் உதவி அரசாங்க அதிபரின் இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் குறிப்பிட்டார்.

அஞ்சலிக் கூட்டம் அன்று நீர்வேலி நந்தாவிலிலுள்ள இல்லத்தில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக அதிகாரி திரு. கே. சண்முகசுந்தரன் தலைமையில் நடைபெற்றது. திரு. மகாலிங்கம் மேலும் கூறியதாவது: ''சொல்லொணாத் துயரில் வாழும் மக்களுக்கு அமரர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. ஏழை மக்களின் நலனைப் பேணுவதில் அவர் முன்னின்று உழைத்தார். தமது குறைகளை கூறிவரும் மக்களின் இடர்களைத் தீர்ப்பதில் மன நிறைவுகொண்ட அமரரின் மனிதநேயப் பண்புக்கு நாகரிக உலகு என்றும் தலைவணங்கும்.''

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகிகள்

(மட்டுவில்)

சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக திரு. பொ. சின்னராசா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர் தெரிவு டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. அல்போணிஸ் தலைமையில் நடைபெற்றது. தலைவராக பொ. சின்னராசாவும், உப தலைவராக சி. கிருஷ்ணனும், செயலாளராக வ. கதிரேசுவும் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்டனர்.

மேலும் க. சோமு ச.செல்லையா, நா. சின்னவன், இ. செல்லத்துரை, க. சின்னத்துரை, ச. வாரித்தம்பி ஆகியோரும் இயக்குநர் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பிரதேசத்திலுள்ள ஐக்கிய நாணய சங்கங்கள் சிக்கன கடன் வழங்கும் சங்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சமாஜத்தின் அங்குரார்ப் பணக் கூட்டம் நடைபெற்ற போது நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்; சு. ஸ்ரீபாஸ்கரன், துணைத் தலைவர்: இ. இராசநாயகம், செயலாளர்: வை. குணாளன், துணைச்செயலாளர் க. தனபாலசிங்கம், பொருளாளர்: த. கிருஷ்ணசாமி, மற்றும் திருமதி வே. கணேசலிங்கம், திருமதி நா. கனகரத்தினம், திருமதி செ. வெற்றிவேலாயுதம், நா. பேஜன், க. சிவபாதம், ந. செந்தில்நாதன் ஆகியோர் உறுப்பினர்களாகத் தெரிவாகினர்.

ஃ ஃ

(மட்டுவில்)

சரசாலை நுணுவில் ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலய பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுச்சபைக்கூட்டம் தலைவர் சைவப்புலவர் ச. கைலாசபிள்ளை தலைமையில் நடைபெற்றது. ஆலய முன்றலில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில் இச்சபையின் புதிய நிர்வாகிகளாக கீழ்காண்போர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: சைவப்புலவர் ச. கைலாசபிள்ளை, உபதலைவர்: கு. ஞானேஸ்வரன், செயலாளர்: கு. பரராஜசேகரம், உட செயலாளர்: வி.முத்துலிங்கம் பொருளாளர்: க. மகாலிங்கம்.

ஃ ஃ

(புங்குடுதீவு)

புங்குடுதீவு புனித. பிரான்சீஸ் சவேரியார் ஆலய பரிபாலன சபை நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: அருள்திரு. யே. யேசுதாசன் (பங்குத் தந்தை), செயலாளர்: யோ. றிச்சார்ட் டொமினிக், உப செயலாளர். இ. பவுளிஸ், பொருளாளர்: எஸ். பத்திநேசன்.

9 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு செபமாலை மாதா சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ஏ. இ. பீரிஸ், செயலாளர் எ. ஜெரிஸ், பொருளாளர் எம். ஸ்ரனிஸ் லொஸ், ஒன்பது நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## இராசி பலன்

01-07-1989

திரயோதசி பகல் 1-52 வரை, ரோகினி மாலை 4-32 வரை, இராகுகாலம் 8-56 முதல் 10-30 வரை. அமிர்த சித்தயோகம் சுபகருமங்கள் செய்யலாம்.

மேடம்: மனதில் சந்தோஷம், எதிர்பாராத உதவி, தொழில் மூலமான சிந்தனை. குடும்பத்தில் களிப்பு, வெற்றி.

இடபம்: பயணங்களால் பொருள் நஷ்டம், கண்ணியம் குறைவு, குடும்பத்தில் விரிசல், படன்படல், வெறுப்பு,

மிதுனம்: தொழில் உறவு, கைப்பொருள் இழப்பு, குடும்ப வசீகரம், பெரியோர் ஆசி, கடித உறவு.

கடகம்: தொழில் பிணக்கு, பொருள் நஷ்டம், குடும்பத்தில் சந்தேகம், ஏக்கம், மனச்சுமை,

சிங்கம்: தொழில் லாபம், உறவினர் வருகை, அதிகாரம், தூரத்துச்செய்தி, மனநிறைவு, பயணம்.

கன்னி; பிரச்னைக்குத் தீர்வு, புதிய பதவி, கடன் வசூல், தாய்வழி விரோதம், கடமையுணர்வு,

துலாம்: பலவந்தம், எதிரிகள் தொல்லை, பணக்கஷ்டம், பெண்கள் தொல்லை, அலைச்சல்,

விருச்சிகம்: சிறு விபத்து வைத்தியச்செலவு மனதில் கவலை, தொழில் லாபக் குறைவு, குடும்ப விரிசல்.

தனுசு: எதிர்பாராத உதவி, நண்பர்கள் துரோகமிழைப்பர், தொழில் வெற்றி, வீட்டில் மங்கள காரியம்.

மகரம்: மக்களால் புகழ், தொழில் லாபம், இராஜ சன்மானம், பயணங்களால் காரிய அனுகூலம்.

கும்பம்: காரிய நஷ்டம், போன இடத்தில் விரோதம், அலைச்சல் மிகுதி, மனைவியால் துன்பம்.

மீனம்: வேலைப்பளு, வீண் சந்தேகம், மனத்தில் கவலை, அதிகாரிகளால் தொல்லை, குடும்பத்தில் சச்சரவு.

## இலங்கை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விமர்சகர் திரு. குல்திப் நாயர் தெரிவித்துள்ளார்.

'கரண்ட்' என்ற இந்திய சஞ்சிகையில் எழுதிய கட்டுரையில் திரு. நாயர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

''ஒருநாடு விரும்பாதபோது அந்நாட்டில் குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று கூறி ஒரு வெளிநாட்டுச் சக்தி அங்கு தங்கியிருக்கவேண்டுமெனப் பிடிவாதம் செய்வதை எந்த ஒரு நாடும் அனுமதிக்க மாட்டாது.

## அமைதிப்படை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வேறு வழி இல்லை.''

இவ்வாறு இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் சஞ்சிகை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

''அமைதிப்படைகளை விலக்கிக்கொள்வதற்கு இந்தியா முன் நிபந்தனைகளை விதிக்க முயற்சிக்கும் பட்சத்தில், நிலைமை மேலும் மோசமடையும், இருநாடுகளுக்குமிடையிலான உறவுகளைச் சீரழிக்க முயலும் இலங்கையின் சக்திகளுக்கு இந்த நடவடிக்கை மேலும் வலுவூட்டும்'' என்றும் அந்த சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அமைதிப்படை இலங்கையில் இருக்கவேண்டும் என்பதை இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி இதுவரை வலியுறுத்தி வந்தது தெரிந்ததே.

# யாழ். குடாநாட்டில் அடகு நகைகள் மீளளிக்க ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் அடுத்த வாரமளவில் அடகு நகைகள் மீளளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து இந்த நகைகள் எந்நேரமும் விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் பிரதான வீதி, நவீனசந்தை 'கன்னுதிட்டி. சங்கானை. ஊர்காவற்றுறை, சுன்னுகம், காங்கேசன்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் வைத்தே இந்நகைகள் மீளளிப்புச் செய்யப்படவுள்ளன.

ஊர்காவற்றுறையில் அடகு வைத்தவர்களுக்கு யாழ்ப்பாணத்திலும், வல்வெட்டித்துறையில் அடகு வைத்தவர்களுக்கு நெல்லியடியிலும் மீளளிப்புச் செய்யப்படும்.

## கிழக்கு வானில் நாளை

(யாழ்ப்பாணம்)

நாளை அதிகாலை நான்கு மணியளவில் கிழக்கு வானில் சந்திரனும், அதற்கு தெற்கில் ஐந்து பாகை தூரத்தில் வியாழனும், அதற்குத் தெற்கே ஒரு பாகையில் புதனும் தோன்றுவதை மக்கள் அவதானிக்கலாம் என யாழ்ப்பாணம் வானியல் கழகம் அறிவித்துள்ளது.

சந்திரன், புதன், வியாழன் ஒன்றுசேரும் அரிய காட்சி இது என மேற்படி கழகம் தெரிவித்துள்ளது.

## இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

பூநகரி அத்தாய்ப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த துரைசிங்கம் நடேஸ்வரன் (வயது 26 )என்ற இளைஞன் பூநகரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## இளைஞர்கள் தாக்கப்பட்டனர்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வராத்துப்பளையைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் பலத்த தாக்குதல்களுக்கு இலக்காகி சிகிச்சை பெற்றுவருகின்றனர். பருத்தித்துறையில் நடைபெற்ற மோதல்களையடுத்தே இவர்கள் தாக்குதல்களுக்குள்ளாகினர்.

எஸ். குருபரன் (வயது–18), வி. கணேசதாஸ் (வயது–18), வி. கிருஸ்ண குமார் (வயது–16) வைத்தியசாலை ஊழியர் எஸ். விமலேந்திரன் (வயது-37) ஆகிய நால்வருமே தாக்குதல்களுக்குள்ளானவர்களாவர்.

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி அறவழிப் பாலர் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி திரு. எஸ். இலட்சுமணன் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இல்ல விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாடுகளை பாடசாலை ஆசிரியை திருமதி சிவமணி குணராஜா செய்து வருகிறுர்.

## மதிய உணவால்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

னையில் ஆசிரியர்கள் கவனம் செலுத்தமுடியும். மதிய உணவுத்திட்டத்தை அதன் உள் நோக்கத்திற்கமைய செயற்படுத்தினுல், மாணவர்களின் உடல் மட்டுமல்ல உள்ளமும் வளர்ந்திட வாய்ப்புண்டாகும். அதனுல் பசியோடு மாணவர்கள் இனி இருக்க வேண்டிய அவசியமிருக்காது.''

## போதைவஸ்து

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கோஸே அப்பராண்டிஸ் என்பவரே பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கொலம்பியாவிலிருந்து அமெரிக்காவுக்கு மேற்கொள்ளப்படும் போதைவஸ்து கடத்தலைத் தடுக்க உள்துறை அமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரி [illegible]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு:

16-05-1921

()

இறப்பு:

01-06-1989



### திருமதி அந்தோனிப்பிள்ளை அருளம்மா

எம்மை விட்டு நீ பிரிந்து முப்பத்தொரு நாட்கள்
போனதம்மா!
எம்முயிர் எம்மைவிட்டுப் போகும்வரை
எம் நெஞ்சிலிருந்து உன் நினைவு போகாது!
எம்முள்ளே நீ என்றும் நடமாடும் தெய்வமம்மா!
எம் கண்ணில் வடியும் நீர் செந்நீர்த் துளிகளம்மா!
என்று நீ மீளவந்து எம் துயரைத் தீர்ப்பாயோ?
அன்றுவரை எமக்கு ஆறுத்துயரமம்மா!

அ. அருள்தாஸ் (மகன்)

தங்கள் நினைவால் வாடும்;

**கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்: சகோதர சகோதரிகள், உற்றுர், உறவினர்கள்.**


'அருள் அகம்', 10, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 3027)

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

1 - 7 - 1989

தாயின் மடியில்: 29 - 01 - 1962



ஆண்டவன் மடியில்: 18 - 05 - 1989

### சின்னத்தம்பி மன்மதராசன் (சைமன்)

அன்பின் ஒளி விளக்கே! அறிவின் பிறப்பிடமே! ஒளி வீசும் மன்மதச் சுடரே! எம் வாழ்வில் உம்மை இனி எங்குதான் காண்போம். எம்மையெல்லாம் கலங்கவைத்து எங்கே நீர் சென்றீரோ. உம் பெற்றோர் உடன் பிறந்தோர் நிலைகுலைந்து கதறியழ நீர் மீளாத் துயில் கொண்டதேனோ. காலங்கள் சாகவில்லை, உன் நெஞ்சில் கடமைகளும் சாகவில்லை. பாரினில் உன் புகழ் என்றும் திகழ்கவே.

உன் பிரிவால் துயருறும்

அப்பா, அம்மா, அண்ணன்மார், தம்பிமார், அன்புத்தங்கை, அண்ணி, பெருமக்கள், உறவினர்கள், நண்பர்கள்.

லிங்கன் வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

(சி–8029)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ். பல்கலைக்கழகத்தில்

## மாணவன் வரைந்த ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் ஓவியக்கண்காட்சி நேற்று ஆரம்பமாகியுள்ளது.

பல்கலைக்கழக மாணவரான செல்வன் அ. சதீஸ் வரைந்துள்ள ஓவியங்களே இங்கு இடம் பெற்றுள்ளன.

கலைப்பீட பொதுஅறையில் வைக்கப்பட்டுள்ள இந்த ஓவியக் கண்காட்சியை, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா நேற்றுக்காலை ஆரம்பித்து வைத்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும், உத்தியோகத்தர்களும், மாணவர்களும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த ஓவியங்களைப் பார்வையிட்டனர்.

---

## ஹாட்லியின் விளையாட்டு மைதானம் புனரமைக்கப்பட்டது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை சர்வோதய நிறுவனம் புனரமைத்து கல்லூரிக்கு வழங்கியுள்ளது. இக்கல்லூரி மாணவர்களின் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்க உதவும்நோக்குடனேயே சர்வோதயம் இதனைப் புனரமைத்துள்ளது.

விளையாட்டு மைதானம் திருத்தி புனரமைக்கும் நடவடிக்கைகள் வடமராட்சி சர்வோதயப் பொறுப்பாளர் திரு. பீ. தில்லைநாதன், திரு. எஸ். பாலசுந்தரம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. கே. வி. செல்வராஜனின் அனுசரணையுடன் நடைபெற்ற இவ் விளையாட்டுமைதான புனரமைப்பு சிரமதான நடவடிக்கைகளில் பெண்கள் உட்பட 50 பேர் கலந்துகொண்டனர்.

நாட்டு நிலைமை சீராக இருக்குமாயின் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுனர் போட்டிகள் இம் மைதானத்திலேயே நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

---

## தபால்பெட்டி விபரங்கள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பகுதிகளிலுள்ள தபாற் பெட்டிகளின் நிலைமைகள் பற்றிய விபரங்களை அந்தந்த பிரிவுகளில் தபால்களை சேகரிக்கும் தபால்ஊழியர்களும் தந்துதவவேண்டுமென கேட்கப்பட்டுள்ளனர்.

இந்தப்பெட்டியின் நிலைமை அவை இருக்குமிடம் போன் விபரங்கள் கேட்கப்பட்டுள்ளன.

யாழ். தபால் திணைக்களத்திலிருந்து பெறப்பட்டுள்ள அறிவித்தலின் பேரிலேயே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது.

---

### பொதுசன நூலகத்தில்

## புதிய நூல்கள் இல்லை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பொதுசன நூல்நிலையத்தில் புதிய நூல்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

வலி, தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு உப அலுவலகத்தினால் நிர்வகிக்கப்பட்டுவரும் இந்த பொதுசன நூல் நிலையத்தில் கடந்த இருவருடங்களாக புதிய நூல்கள் எதுவும் கொள்வனவு செய்யப்படவில்லையாம்.

---

### யாழ். நகரில்

## சுகாதார வாரம்: ஜூலை 3ல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்றம் நடாத்தவுள்ள சுகாதார வாரத்தின்போது நகரைச் சுத்தமாக வைத்திருப்பதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பை யாழ். மாநகராட்சி மன்றம் கோரியுள்ளது.

இம்மாதம் மூன்றும் திகதி முதல் ஒன்பதாந் திகதிவரை சுகாதார வாரம் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

சுகாதாரத் திணைக்களம் மேற்படி வாரத்தையே நாடு பூராவும் சுகாதார வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்த சுகாதார வாரத்தில் யாழ். மாநகர சபை பின் வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

யாழ். நாவலர் மண்டபத்தில் சனசமூக நிலையங்களைச் சேர்ந்த தொண்டர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும்.

சனசமூக நிலையங்களுக்கிடையே சுகாதாரப் போட்டிகள் நடாத்தப்படும்.

சிகிச்சை நிலையங்களில் சுகாதார அறிவுரை சொற்பொழிவுகள் இடம்பெறும்.

கர்ப்பிணித்தாய்மார்கள் குழந்தைகளின் சுகாதாரப் போட்டியில் வெற்றிபெற்றோர்க்கு 8-ந் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் பரிசில்கள் வழங்கப்படும்.

---

### இராமநாதன் நுண்கலைப்பிரிவு:

## டிப்ளோமா பயிற்சிநெறி: சித்தியடைந்தோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவில் 'டிப்ளோமா' பயிற்சி நெறியில் 1988ம் ஆண்டு இறுதிப் பரீட்சையில் நான்குபேர் இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்துள்ளனர்;

நாற்பத்தி மூன்றுபேர் சித்திபெற்றுள்னர். இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்தோர் விபரம்; செல்விகள் எம். கலைவாணி, எஸ். யசோதா, பி. ஜெயவேணி. சி, லஷ்மி.

சித்தியடைந்தோர் பின்வருமாறு:

செல்விகள்: கே! அன்பரசி, ரி. நளாயினி, என். நிரஜா. என். பிரேமலதா, ஏ. விக்கினேஸ்வரி, ஜி. சந்திரிகா, எஸ். கீதாமணி, எம். லைலாவதி, என்.மாலினி, கே. நித்தியகலா, எம். பிரேமினி, எஸ். பி. மல்லிகா பீரிஸ், கே. தவராணி, ரி. மாலதி, கே. வாஸஸ்பதி, ரி. வத்ஸசலா, ஆர். கங்கா, பி. சிவகலை, பி. சிவசோதி, எஸ். யசோதா, பி. வரதலஷ்மி, வி. குகனேஸ்வரி, எஸ். உர்ஷலாதேவி, ஏச். சங்கரி, எஸ். சுகந்தினி, ரி. பவானி, கே. கங்கா, எம். கிருஷ்ணபவானி வை. குமுதினி, கே. மாலதி, ஏ, பிரியதர்சினி, எஸ். கிருபாகரி, ரி. வாசுகி, ரி. ஹேமாவதி, வி. அன்பரசி, வி. கலைவாணி, எஸ். இந்திரா, எஸ். புஸ்பராணி, ஜி. சசிகலா, கே. சுபாஷினி, கே. கலராமணி, எஸ், லிங்கேஸ்வரி, ரி. மனோரஞ்சனி.

---

## புதிய நிர்வாகிகள்

(சுன்னாகம்)

ஏழாலை கொத்தணிக் கல்வி அமைப்பின் நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. ரி. டானியல், செயலாளர்: திரு. எஸ். நடேசன், பொருளாளர்: திரு. ஐ. நவரத்தினம், ஒவ்வொரு பகுதிக்குமான செயற்குழுக்களும் தெரிவு செய்யப்பட்டன.

---

## ஏழை மக்களின்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏழாலை சைவசமய அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு சி. சக்திகிரீவன் பேசுகையில் ''மக்களின் சமூக பொருளாதார நலனைப் பேணுவதோடு அவர்களின் சமய உணர்வையும் மேம்படுத்த வேண்டுமென்று கிராமசேவை அலுவலர்களை நெறிப்படுத்திய ஆரரர் குலேந்திராவின் இழப்பு, ஆத்மீக உலகில் கணிக்கத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அமரரின் சமய, சமூகப் பணிகள் நிலைக்கும்'' என்றார்.

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் எஸ். சபாபதிப்பிள்ளை பேசுகையில்; ''மக்கள் உணர்வுக்கு முதன்மை கொடுத்து அமரர் ஆற்றிய பணிகள், அனைத்துஅதிகாரிகளுக்கும் முன்னுதாரணமாக விளங்குகின்றது'' என்றார்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர்பிரிவு கிராமசேவையாளர்கள்சார்பில் திரு. அ.க. த. கிருஷ்ணராசா மற்றும் பல பொது ஸ்தாபனப் பிரதிநிதிகளும், அரசாங்க அதிகாரிகளும் இரங்கலுரை நிகழ்த்தினர்கள்.


ஹரன் சினிமா
(யாழ்ப்பாணம்)
4-வது வெற்றி வாரம்
சத்தியராஜ்–நதியா
நடித்த
சின்னத்தம்பி
பெரியதம்பி



நியூசாந்தி யாழ்நகர்
10-30, 2–30 மணிக்கு
விஜயகாந்த் – பூர்ணிமா
சங்கிலிமுருகன்
சட்டம் ஒரு
இருட்டறை
(ஈஸ்ட்மன் கலர்)


---

### சுகாதாரப் பரிசாரகர்கள்:

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன!

(சுன்னாகம்)

யாழ்ப்பாணம் கிளிநொச்சி சுகாதாரசேவைகள் பிராந்திய பணிப்பாளர் பெரும்பாகத்தில் ஆண், பெண் பரிசாரகர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பத்தாரிகள் 18 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவும் க. பொ. த. சாதாரண தரத்தில் அல்லது சமமானதரத்தில் மொழி, கணிதம், உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்து இருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் இம்மாதம் 4-ம் திகதியன்றோ, அதற்கு முன்னரோ யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனையில் நேரிலோ, தபால் மூலமாகவோ அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பத்தாரிகளுக்கு மூன்று மாதகாலப் பயிற்சி அளிக்கப்பட இருப்பதாகவும், பயிற்சிக்காலத்தில் நடைபெறும் பரீட்சைகளிலும் இறுதிப் பரீட்சையிலும் சித்தியடைவோரே பரிசாரகராக நியமிக்கப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முழுப்பெயர், விலாசம், தகைமை, தொகுதி என்பவற்றை உள்ளடக்கியதாக விண்ணப்பத்தை தாமாகவே தயாரித்து அனுப்புமாறும் கேட்கப்பட்டுள்ளது.

---

### க. பொ. த. பரீட்சையில்

## 5 மாணவர் விசேஷ சித்தி

(நெல்லியடி)

அண்மையில் வெளியான க. பொ. த. (சாதாரண) புதியபாடத்திட்டமுடிவுகளின் படி கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி மாணவன் செல்வன் எஸ். ஸ்ரீதரன் ஆறு பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளார்.

இதனைத்தவிர மற்றொரு மாணவர் ஐந்து பாடங்களிலும் வேறொரு மாணவர் நான்கு பாடங்களிலும், வேறிருமாணவர் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர்.

இக்கல்லூரியில் பரீட்சைக்குத் தோற்றிய 97 மாணவ, மாணவிகளில் ஐம்பத்திரண்டு மாணவ மாணவியர் க.பொ.த. (உயர்தரம்) வகுப்புக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது,

---

### தொலைக்கல்வி

## ஆசிரியர் பயிற்சி ஒத்திவைப்பு

(நாவற்குழி)

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று ஆரம்பிக்கப்படவிருந்த தொலைக்கல்வி ஆசிரிய பயிற்சி மறு அறிவித்தல்வரை பின்போடப்பட்டுள்ளது.

தபால் போக்குவரத்து காரணமாக மே மாதம் வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகள் கல்வி அமைச்சிலிருந்து இதுவரை கிடைக்காத காரணத்தினாலேயே இப்பயிற்சி பின்போடப்பட்டுள்ளதாக தொலைக்கல்விப் பயிற்சியின் சிரேஷ்ட விரிவுரையாளரான திரு. ம. செ. அலெக்சாண்டர் தெரிவித்தார்.

இப்பயிற்சிநெறி தொடங்கும் திகதி பத்திரிகைகள் மூலம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

87/89ம் ஆண்டு தொலைக் கல்விப் பயிற்சிபெறுவோர்க்கு ஒருநாள் கற்கை வட்டம் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் ஜூலை 8ம் திகதிநடைபெறும்.

---

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளிலும், அச்சகத்திலும் வேலைசெய்வதற்கென முகாமையாளர், விற்பனையாளர், அச்சுக்கோப்பாளர் ஆகிய பதவிகளுக்கு ஆட்களை எடுப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் முடிவடைந்து விட்டன.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கானகடிதங்கள்விரைவில் அனுப்பிவைக்கப்படும் எனத் தெரிகிறது.

---

## திருமுறை அறிவுப்போட்டியில் முதலிடம்

(சுண்டுக்குளி)

இலங்கை வேதாகம சங்கத்தினர் அகில இலங்கை ரீதியில் நடத்திய திருமுறை அறிவுப்போட்டியில், நல்லூர் பரியாக்கோபு ஆலய ஒய்வு நாட் பாடசாலை வெற்றிக்கேடயத்தையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டது.

இப்பாடசாலையின் கனிஷ்ட பிரிவில் முதலாம் இடத்தையும், சிரேஷ்ட பிரிவில் இரண்டாம் இடத்தையும் பெற்றுச் சாதனை நிலைநாட்டியுள்ளது.

இப்போட்டியில் இலங்கை முழுவதிலுமுள்ள 137 குழுக்கள் பங்குபற்றின. இறுதிப் போட்டிகள் கொழும்பு, கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த கல்லூரியில் நடைபெற்றன.

---

## தையல் பயிற்சி நிலைய நிறைவு விழா

(சுன்னாகம்)

சுன்னாகம் நடமாடும்தையல் பயிற்சி நிலையத்தின் ஒன்பது மாத நிறைவுவிழாவை ஒட்டி நடத்தப்படவிருக்கும் பொருட்காட்சி இம்மாதம் 6ம் தேதி முற்பகல் நிலையத்தில் நடைபெறவிருக்கின்றது.

வடமாநில தொழிற்திணைக்கள ஆணையாளர் திரு கே, சிவப்பிரகாசத்தினால் இவ் விழா ஆரம்பித்துவைக்கப்படவிருக்கின்றது. உதவி ஆணையாளர் திரு. வி. தியாகராஜாவும் கலந்துகொள்வார்.

---

## உற்சவம்

(சுன்னாகம்)

சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

7ம் தேதி சப்பரத் திருவிழாவும், 8ம் தேதி காலை தேர்த் திருவிழாவும் 9ம் தேதி ஞாயிறு காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

---

## முதுகலைமாணி பட்டம் பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி பட்டம் பெற்றுக்கொண்ட மூவரின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சமஸ்கிருதத்தில் முதுகலைமாணி (எம்.ஏ,) பட்டத்தை திருமதி வி. சிவச்சந்திரனும், புவியியலில் திரு. பி. சிங்கரத்தினமும், பொருளியலில் செல்வி ஏச். மாசிலாமணியும் பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சிறுப்பர்’ ஆட்சேர்ப்பு: பரீட்சை ஒத்திவைப்பு!

(யாழ்ப்பாணம்)

பரீட்சைத் திணைக்களத்தால் இன்று நடத்தப்படவிருந்த சிறுப்பர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேம்படி மகளிர் கல்லூரியில் இரு நிலையங்களில் இன்று நடைபெறவிருந்த இப்பரீட்சையில் இருநூறிற்குமதிகமானவர்கள் தோற்றவிருந்தார்கள்.

## பாடசாலைப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை - இந்திய ஒப்பந்தம் பூரணமாக நிறைவேற்றப்படுவதைத் தடுத்து, இந்திய அமைதிப் படையை வெளியேற்ற முனைந்து நிற்கும் பேரினவாத சக்திகள், தென்னிலங்கை மாணவர்களை இத்தகைய பிற்போக்கு நடவடிக்கைகளுக்கே இன்று பிரதானமாகப் பயன்படுத்தி வருகின்றனர். இளம் வயதிலேயே இனவாத விஷத்தை மாணவர்களுக்கு ஊட்டுவதில் முனைந்து நின்று செயற்படும் பிற்போக்குச் சக்திகளின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக யாழ்ப்பாண மாணவர்களைப் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கச்செய்வதின்மூலம், தென்னிலங்கை இனவாத சக்திகளின் தமிழர் விரோத நடவடிக்கைகளுக்கு எமது மாணவர்களையும் பகடைக் காய்களாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

“மாணவர்கள் தம்மையறியாமலே சமூக விரோத சக்திகளின் சூழ்ச்சிக்குப் பலியாகி, எமது அடிப்படை உரிமைகளுக்கும், இலட்சியங்களுக்கும் எதிராக நாமே சிங்கள இனவாத சக்திகளுடன் இணைந்து போராடும் சூழ்நிலை உருவாக ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

“தமிழ் பேசும் மக்களின் நிரந்தர அமைதிக்கு இடையூறாக செயல்ப்பட்டுவரும் சக்திகள், தமது நடவடிக்கைகளுக்கு மாணவர்களைப் பயன்படுத்துவதுமல்லாமல் பல்கலைக்கழகங்களையும், கல்விக் கூடங்களையும், தமது மறைவிடங்களாக்கப் பயன்படுத்துவதின் காரணமாகவே சில சந்தர்ப்பங்களில் மாணவர்கள் பாதிக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது என்பதை பொறுப்புள்ள பெற்றோர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். கடந்த காலத்தில் தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தில் முன்னணிச் சக்தியாக விளங்கி பல்வேறு வெகுசனப்போராட்டங்களை முன்னெடுத்த மாணவர் சமுதாயம், இன்று தமிழ் பேசும் மக்களை மீண்டும் நட்டாற்றில் விடும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக செயல்பட வேண்டாமென கேட்டுக்கொள்கின்றோம்.

“மாணவர்களும், பொறுப்புள்ள பெற்றோர்களும் இன்றைய அரசியல் சூழ்நிலையை நன்கு புரிந்து கொண்டு ஒவ்வொருவரும் சுதந்திரமாகச் சிந்தித்துச் செயலாற்றுவதுடன் வடக்கு கிழக்கின் ஏனைய எல்லா மாவட்டங்களிலும் பாடசாலைகள் தொடர்ந்தும் இயங்குவதையும் கவனத்தில் எடுத்து, யாழ். மாவட்டத்தில் அதிலும் வடமராட்சியைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மட்டும் பகிஸ்கரிப்பதின் மூலம் பேரினவாதிகளுக்கே உதவுகின்றீர்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.”

## பாரியமரம் வீழ்ந்தது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பஸ்டிப்போவுக்கு முன்னால் இருந்த பாரியவாகை மரம் ஒன்று வேருடன் சரிந்து விழுந்துள்ளது.

பெரிய ‘டிரக்’ வாகனம் ஒன்றினால் மோதப்பட்டே இந்தமரம் வீழ்த்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நஷ்டம் ஏற்பட்டாலும் கட்டுப்பாட்டு விலையில் மா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர பல நோக்கு கூட்டுறவுச் சங்கக்கடைகளில் இன்று முதல் ஒரு கிலோ மா எட்டு ரூபாவிறகே விற்பனை செய்யப்படும். என்று யாழ். ப. நோ. கூ. சங்க தலைவர் தெரிவித்தார்.

1987 ம் ஆண்டு லொறிகளில் வவுனியாவுக்கு சென்று மா மூடைகளை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் வந்ததற்கான போக்குவரத்து செலவை யாழ். செயலகம் இன்னமும் யாழ். மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் செலுத்தவில்லை. இந் நிலையில் இன்று திருகோணமலைக்குச் சென்று மா மூடைகளை ஏற்றி வந்து எப்படி கட்டுப்பாட்டு விலைக்கு விற்க முடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பினர்.

ஒரு கிலோ மாவின் கட்டுப்பாட்டு விலை எட்டு ரூபாவாக இருக்கும்போது மேற்படி சங்கங்கடைகளில் எட்டு ரூபா இருபத்தைந்து சதத்துக்கு விற்பனை செய்யப்பட்டது தொடர்பாக வினவியபோதே சங்கத் தலைவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினர். அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலைக்கு ஒரு லொறி சென்றுவர ஆறுயிரம் ரூபா கூலி கொடுக்க வேண்டியுள்ளது. ஒரு கிலோ மாவைச் சங்கத்துக்கு ஏழு ரூபா இருபத்தைந்து சதத்துக்கே அரசாங்கம் தருகிறது. ஒரு லொறியில் பத்தாயிரம் கிலோ மா மட்டுமே கொண்டு வர முடியும்,

ஒரு கிலோ மாவை எட்டு ரூபா இருபத்தைந்து சதத்துக்கு விற்பனை செய்தால்கூட சங்கத்திற்கு நஷ்டமே ஏற்படுகிறது.

யாழ். செயலகம் மாவை யாழ்ப்பாணத்துக்கு வரவழைத்து 7 ரூபா 25 சதத்திற்குத் தருமாயின் எட்டு ரூபா விலைக்கு நஷ்டமின்றி விற்பனை செய்ய முடியும்.

## யாழ்.நகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுதாபம் தெரிவித்தே கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

## யுத்தநிறுத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களிலுள்ள இந்திய அமைதிப் படை யுத்தநிறுத்தம் செய்ய வேண்டும் என்று கேட்டிருந்தார்.

இலங்கை ஜனாதிபதியின் கோரிக்கை தொடர்பாக விடுத்த அறிக்கையிலேயே வெளிவிவகார அதிகாரி இந்த நிபந்தனைகளை வெளியிட்டார். இந்தியாவின் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் யுத்த நிறுத்தம் பற்றித் தீர்மானிக்கப்படுமென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# யாழ். கோட்ட பாடசாலைகளுக்கு 346 பட்டதாரி ஆசிரியர்கள்

(யாழ்ப்பாணம்)

வெளி மாவட்டங்களிலிருந்து மாற்றலாகி வரவுள்ள 346 பட்டதாரி ஆசிரியர்களும் யாழ். கோட்டக் கல்விப்பகுதிக்குள் இருக்கும் பாடசாலைகளுக்கே நியமிக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

யாழ். கோட்டக்கல்விப் பகுதிக்குள் அடங்கும், நல்லூர் யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களின் விபரங்களை திரட்டும் வேலை ஆரம்பமாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான பட்டியல் இன்னும் சில தினங்களில் வெளியிடவிருப்பதாக யாழ்ப்பாணம் கோட்டக்கல்வி அலுவலக வட்டாரங்கள் அறிவித்தன.

## பருத்தித்துறையில் பதற்றம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரில் நேற்றுக்காலை ஏற்பட்ட திடீர் பதற்றம் காரணமாக நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது

திறக்கப்பட்டிருந்த கடைகள் யாவும் திடீரென மூடப்பட்டன.

‘மினி’ பஸ்கள் கிராம கோட்டடியிலிருந்து சேவைகளை நடத்தின இ. போ. ச பஸ்களும் மிகக் குறைவாகவே சேவையில் ஈடுபட்டன.

## கிளிநொச்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சில மினிவான்களும் தனியார் வாகனங்களும் பரந்தன், முல்லைத்தீவு ஊடாக வவுனியா-கொழும்பு போன்ற தூர இடங்களுக்கு பிரயாணத்தை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## பல்கலைக்கழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரை விடுவிப்பதுதொடர்பாக யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் திரு. அ. துரைராஜா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

## சார்க்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டை மேலும் ஒத்திவைக்காமல் விரைவில் நடத்த ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கையை ஜனப் ஹுசன் வலியுறுத்துவார் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளையில், இலங்கையிலிருந்து இந்திய அமைதிப் படை உடன் திருப்பி அழைக்கப்படவேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சியின் தலைவரும், முன்னாள் இந்திய வெளிவிவகார அமைச்சருமான திரு. வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

# புலோலியில் அசம்பாவிதம்: இருவர் பலி!

[பருத்தித்துறை]

புலோலியில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற மோதல் சம்பவங்களை அடுத்து நடைபெற்ற ஷெல் தாக்குதல்கள், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இருவர் பலியாகினர். இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகிப் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புலோலி தெற்கைச் சேர்ந்த எஸ். மணியம்(வயது 24) அதே யூரைச் சேர்ந்த திருமதி மீனும்பிகை ஆகியோரே பலியானவர்களாவர். துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட எஸ். கதிர்காநாதன் (வயது 48), ஷெல் தாக்குதலுக்குள்ளான இந்துமதி (வயது 16) ஆகியோர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

புலோலியில் நேற்றும் கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகள் இயங்கவில்லை. சனநடமாட்டம் மிகக் குறைவாகவேகாணப்பட்டது.

## மார்க்கோஸ் உடல்நிலை

(வாஷிங்டன்)

பிலிப்பைன்ஸ் முன்னாள் அதிபர் திரு. பேர்டினன்ட் மார்கோஸின் உடல்நிலை மோசமடைந்ததை அடுத்து அவருக்கு சத்திர சிகிச்சை ஒன்று செய்யப்பட்டது என அறிவிக்கப்பட்டது.

## கொழும்பில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

போகவேண்டாமென்று ஜே. வி.பி. சுவரொட்டிகள் மூலம் கேட்டிருக்கிறது. இந்தச் சுவரொட்டிகள் கொழும்பு நகரெங்கும் நேற்றுக் காணப்பட்டன.

கொழும்பு நகரை மீண்டும் செயலிழக்கச் செய்யவே ஜே. வி. பி. முயன்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாகச் சேவையில் ஈடுபட்டுவரும் தனியார் பஸ்களுக்கும் பயமுறுத்தல்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், நேற்று முன்தினம் மருதானையில் தனியார் பஸ் ஒன்று தீவைத்துக் கொளுத்தப்பட்டது. பஸ்ஸின் நடத்துனரும் சுட்டுக்கொல்லப்பட்டார். இச்சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று தனியார் பஸ்களும் சேவையிலீடுபடவில்லை.

### ரயில்வே ‘கார்ட்’ சுட்டுக்கொலை

திங்கட்கிழமை முதல் வேலைக்குச் செல்லவேண்டாம் என்று ரயில்வே ஊழியர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள அதேவேளையில் நேற்று சேவையிலீடுபட்டிருந்த ரயில் ஒன்றில் கடமையில் ஈடுபட்டிருந்த ‘கார்ட்’ ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்டார்.

### துறைமுகத்தில் தேங்கும் பொருட்கள்

போக்குவரத்துச் சேவை பாதிக்கப்பட்டிருப்பதால் கொழும்பு துறைமுகத்தில் இறக்கப்படும் பொருட்களை விநியோகிக்க முடியாதவாறு நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் துறைமுகத்தில் பொருட்கள் குவிந்துவருகின்றன.

திங்கட்கிழமை முதல் ரயில் சேவை முற்றாகப் பாதிக்கப்பட்டால் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விநியோகம் சீர்குலையும் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “110போக்குவரத்துஊழியர் படுகொலை!”

[கொழும்பு]

“வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள போக்குவரத்துச் சபை ஊழியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றக் கூடியதாக இல்லை”.

இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் திரு. விஜயபால மெண்டிஸ் மஹியங்கனை ‘கம் உதாவ’ கண்காட்சியில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

ஊழியர்கள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டாலுங்கூட, வேலைநிறுத்தத்தைத் தூண்டியவர்கள் திருப்தி அடையமாட்டார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அண்மைக் காலச் சம்பவங்களின்போது 110போக்குவரத்துச் சபை ஊழியர்கள் தீவிச்வாதிகளால் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் கூறினார்.

# அடகு நகைகளை மீளப்பெற வட்டிச் சலுகை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

அடகு நகைகளை மீளப்பெறுவதற்கு மக்கள் வங்கியினால் வழங்கப்பட்டிருந்த 15 வீத வட்டிச் சலுகை மேலும் நீடிக்கப்படவுள்ளது.

வட பிரதேச முகாமையாளர் திரு.எஸ்.சுப்பிரமணியம் மேற்கொண்ட முயற்சிகளைத் தொடர்ந்தே இதனை நீடிப்பதற்கு மக்கள் வங்கித் தலைமையகம் தீர்மானித்துள்ளது.

இந்தச் சலுகை நேற்று 30ம் திகதியுடன் முடிவுற்றதாக மக்கள் வங்கி ஏற்கனவே அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இன்னும் ஆறு மாத காலத்திற்கு இச்சலுகை நீடிக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

## வேலைநிறுத்தம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துச் சபை தெரிவித்துள்ளது.

கொழும்புப் பிராந்தியத்தில் உள்ள ஏழு போக்குவரத்துச் சபை டிப்போக்களில் மட்டும் 120 பஸ்கள் இவ்வாறு சேதமாக்கப்பட்டன.

சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பஸ்களின் டயர்கள் வெட்டப்பட்டும், வயர்கள் வெட்டப்பட்டும் ‘பிரேக்’குகள் சேதப்படுத்தப்பட்டும் இருந்தன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். ஆஸ்பத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது இரண்டுஅடி ஆழத்திற்குக் கீழ் இந்த ஷெல் புதைந்திருக்கக் காணப்பட்டது.

பின்னர் அமைதிப் படை படையினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் அதனை எடுத்துச் சென்றனர். (கு(

## சூடான் அரசு கவிழ்ப்பு

(கார்ட்டூம்)

சூடானில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து அந்நாட்டு அரசாங்கத்தை இராணுவம் கைப்பற்றியுள்ளது,

இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதுடன், பிரதமம் உட்பட்ப் பல அமைச்சர்களூர் இராணுவத் தளபதியும் சிறைவைக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003e6/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephore; 22389. 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org